**O.S.No.7/2019**

வா.சா.3, திரு.பாஸ்கரன்

நாள் : 09.06.2026 நேரம் : 11.00 AM

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்**

1)நான் எங்கு குடியிருந்து வருகிறேன் என்றால் பரமக்குடியில் குடியிருந்து வருகிறேன். சத்திரக்குடியில் போட்டோ ஸ்டுடியோ வைத்துள்ளேன் என்றால் சரிதான். எனது தகப்பனாரின் உடன் பிறந்தவர் பெயர் சண்முகம் என்றால் சரிதான். எனது தாத்தாவின் பெயர் பூச்சி என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள சா.சா.ஆ.2 ஆவணத்தை சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிய செல்லும் போது யார் யார் சென்றோம் என்றால் நான், சண்முகம், செல்லையா மற்றும் கோபால் ஆகியோர் சென்றோம். மேலே குறிப்பிட்டுள்ள மூவரில் கோபால் என்பவர் எனது தகப்பனார் என்றாலும், செல்லையா எனது உடன் பிறந்தவர் என்றாலும் சண்முகம் எனது தகப்பனாரின் உடன் பிறந்தவர் என்றாலும் சரிதான். மேற்படி சா.சா.ஆ.2 ஆவணத்தில் நான் சாட்சி கையொப்பம் இடவில்லை என்றால் சரிதான். சா.சா.ஆ.2 ஆவணம் எழுதப்பட்ட அதே தேதியில் எனது சகோதரர் செல்லையா வா.சா.ஆ.1 ஆவணத்தை எழுது வைத்துள்ளார் என்றால் சரிதான்.

2)வா.சா.ஆ.1 ஆவணத்திலும் நான் சாட்சி கையொப்பம் இடவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ,.1 ஆவணம் ஏற்பட்ட உடனே வா.சா.ஆ.1 ஆவணத்தில் கண்ட சொத்திற்கு செல்லையா மற்றும் அவரது வாரிசுகளான வாதிகள் பட்டா மாறுதல் செய்வதற்கு சென்றார்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் கண்ட சொத்தை பொறுத்து செல்லையா பட்டா மாறுதல் செய்துவிட்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1 ஆவணத்தில் சர்வே எண், நான்குமால், விஸ்தீரணம் சரியாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1, சா.சா.ஆ.2 ஆவணங்களில் சாட்சி கையொப்பம் இட்டவர்கள் எனது தகப்பனார், சகோதரர் மற்றும் பெரிய

தகப்பனார் என்றால் சரிதான். வா.சா.ஆ.1, சா.சா.ஆ.2 எழுதிய தேதிகளில் நான் சார்பதிவாளர் அலுவகத்திற்கு செல்லவில்லை என்றாலும், சென்றிருந்தால் சாட்சி கையொப்பம் இட்டிருப்பேன் என்றாலும் சரியல்ல.

3)மேற்படி 2 ஆவணங்களிலும் கண்ட கையொப்பம் 1ம் பிரதிவாதியான முனியசாமியின் கையொப்பம் அல்ல என்றால் சரியல்ல, அவர்தான் கையொப்பம் இட்டார். 1ம் பிரதிவாதி , 2ம் பிரதிவாதிக்கு தாவா சொத்தை பொறுத்து வா.சா.ஆ.2 ஆவணம் எழுதி கொடுத்த விவரம் அறிந்து வாதிகள் அதை தடுத்தார்கள் என்றாலும், அதை மீறி 1ம் பிரதிவாதி வா.சா.ஆ.2 ஆவணத்தை ஏற்படுத்தினார் என்றால் வாதிகளுக்கு வா.சா.ஆ.2 ஆவணம் ஏற்பட்டு ஒரு வாரத்திற்கு பின்னர் தான் மேற்படி ஆவணம் பற்றி தெரியும். வா.சா.ஆ.2 ஆவணம் ஏற்பட்ட தேதி 24.4.2012 என்றால் சரிதான். வழக்கு சொத்தை பொறுத்தமட்டில் எனது உடன் பிறந்தவர்களின் வாரிசுகள் தான் வாதிகள் என்பதால் உண்மைக்கு புறம்பாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சா.சா.ஆ.2, வா.சா.ஆ.1 ஆவணங்கள் மோசடியாக உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி 2 ஆவணங்களுக்கும், 1ம் பிரதிவாதிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தை முன்பு 1ம் பிரதிவாதியும், தற்போது 2ம் பிரதிவாதியும் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. நான் வெளியூரில் இருப்பதால் தாவா சொத்தை பற்றி எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. எனக்கு இந்த முகவரியில் ஆதார் அட்டை இல்லை என்றால் சரியல்ல. நான் இந்த ஊரில் குடியிருப்பது போல் சா.சா.ஆ. 3 ஆவணத்தை உற்பத்தி செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை இல்லை**</u>

விசாரணை முடிவுற்ற நேரம்: 11.15 AM

APARNA JUDIT CHARLES

Digitally signed by APARNA JUDIT CHARLES
Date: 2026.06.09 16:18:27 +0530